செ.வெ.எண்: 40 நாள்: 19.01.2020

**புதுக்கோட்டையில் 5 வயதிற்குட்பட்ட 1.61 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க நடவடிக்கை.**

**பொதுமக்கள் அதிகம் கூடும் 1,356 மையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருத்தினை வழங்கி தகவல்.**

---

புதுக்கோட்டை நகராட்சி, கோவில்பட்டி நகர்நல மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.01.2020) குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருத்தினை வழங்கினார்கள். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

இன்றையதினம் நாடு முழுவதும் போலியோ சொட்டு மருந்து 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் சுகாதாரத்துறையின் மூலம் போலியோ சொட்டு மருந்து வழங்கிட விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், அனைத்து அரசு மருத்துவமனைகள், சத்துணவு மையங்கள், பள்ளிக்கூடங்கள், பேருந்து நிலையங்கள், இரயில்வே நிலையங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் 1,356 மையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 5 வயதிற்குட்பட்ட 1.61 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்முகாமினை சிறப்புற நடத்திட சுகாதாரம், மருத்துவம், வருவாய், சத்துணவு, கல்வி, ரோட்டரி, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் பல்வேறு அரசு மற்றும் அரசு சாரா துறைகளைச் சேர்ந்த 5,638 க்கும் மேற்பட்ட பணியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் பல்வேறு அரசு துறைகளைச் சார்ந்த 100 க்கும் மேற்பட்ட வாகனங்கள் அந்தந்த ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து சொட்டு மருந்து வழங்கும் மையங்களுக்கு போலியோ சொட்டு மருந்துகளை குறிப்பிட்ட குளிர்பதன நிலையில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சொட்டு மருந்து மையத்திலும் இப்பணிக்கு நான்கு பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு மையங்களுக்கு வரும் அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விடுபட்ட குழந்தைகள் யாரேனும் இருப்பின் நாளையதினம் மேற்கண்ட பணியாளர்கள் இரு குழுக்களாக பிரிந்து வீடு வீடாகச் சென்று விடுபட்ட குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்குவார்கள்.

மேலும் வயல்களில் குடியிருப்போர், சாலையோர குடியிருப்புகள், செங்கல் கால்வாய் குடியிருப்புகள், கல் குவாரிகள், பஸ் நிலையங்கள், திருவிழா கூட்டங்கள், இரயில் நிலையங்கள் சுங்கச்சாவடிகள் போன்ற பகுதிகளில் இருக்கும் குழந்தைகளுக்கு விடுபடாமல் சொட்டு மருந்து வழங்க 24 நடமாடும் குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முகாமின் மூலம் 5 வயதிற்குட்பட்ட ஒரு குழந்தை கூட விடுபடாமல் அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இம்முகாமில் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.அர்ஜுன்குமார், நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், மத்திய தொலைத்தொடர்பு ஆலோசனைக்குழு உறுப்பினர் க.பாஸ்கர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**